THE SEVENTH

# GENERAL REPORT

OF THE

# C. M. S.

# CENTRAL CHURCH COUNCIL,

*CEYLON.*

:o:

இலங்கை

சி. எம். எஸ்.

தலைமை ஆலோசனைச் சங்கத்தின்

பொதுவான

ஏழாவது அறிக்கைப் பத்திரம்.

JAFFNA:
STRONG AND ASBURY, PRINTERS.
1886.

கும். அதுபோல் பாவிக்கு வேண்டியது மன்னிப்புமாத்திரமல்லப் பாவி பரிசுத்தனாய் மாறவேண்டும். விவிலிய வேதம் தரும் இரட்சிப்பு பெறுமதியற்ற மன்னிப்புமல்ல, பெற்ற உடனே அற்றுப்போகும் சமாதானமுமல்ல. பாவ மன்னிப்பைக்குறித்தும், நியாயப்பிரமாணந் திருத்தியாதலைக் குறித்தும், தண்டனைத்தீர்ப்பினின்று விடுதலை பெறுதலைக்குறித்தும் விவிலிய வேதம் அறிவிப்பதுமன்றி: "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" என்றுஞ் சொல்லுகின்றது.

மன்னிப்புமாத்திரமல்ல, வல்லமை, பாவத்தைக் கீழ்ப்படுத்தும் வல்லமை, பசாசை வெற்றிகொள்ளும்வல்லமை, உலகத்தை யெதிர்த்துவெல்லும் வல்லமை, சோதனைகளை மேற்கொள்ளும் வல்லமை, "தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியுமுள்ளவர்களாய் இவ்வுலகத்திலே சீவனம் பண்ணும்" வல்லமையும் தேவ வாக்கினால் நமக்குண்டு.

மனிதர் இப்புத்தகத்துக்குச் செவிகொடுக்கவும் இதன் போதனைகளைப் பின்பற்றவும் கடவர்கள்; உண்மையாக மனந்திரும்பிப் பாவத்தை முற்றாய் விட்டுவிடுவதினாலும், சிலுவையிலறையப்பட்ட இரட்சகரின் புண்ணியத்தில் வைக்கும் மெய்விசுவாசத்தினாலும், இயேசுநாதரின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து செல்லவேண்டுமென்ற பூரண மன நிர்ணயத்தோடும், தேவனிடம் திருபக் கடவர்கள். அப்போ நிச்சயமாய், அவர்கள் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டன என்றறியும் தெளிவான அறிவைப் பெற்றுக்கொள்வார்கள். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு வல்லமையையும் தரித்துக்கொள்வார்கள்.

பாவமன்னிப்பும், பாவத்தைக் கீழ்ப்படுத்தும் வல்லமையும் விவிலியவேத வாக்கினால் எல்லாமனுஷருக்கும் இலவசமாய் அருளப்படுகின்றன. இந்த இரண்டு நியாயங்களினாலும் விவிலியவேதம் இவ்வுலகத்தில் மகாபெரிய வல்லமையாய் இருக்கின்றது என்று அறிக்கையிடுகிறோம்.

---

Published by the Jaffna Religious Tract Society,
Strong and Asbury Printers, Manippay 1888,
Edition 5,000.

THE SEVENEH

# GENERAL REPORT

OF THE

# C. M. S.

# CENTRAL CHURCH COUNCIL,

*CEYLON.*

---

இலங்கை

சி. எம். எஸ்.

# தலைமை ஆலோசனைச் சங்கத்தின்

பொதுவான

# ஏழாவது அறிக்கைப் பத்திரம்.

---


JAFFNA:

STRONG AND ASBURY, PRINTERS.

1886.

# இலங்கை

# சி. எம். எஸ். தலைமை ஆலோசனைச் சங்கத்தின் பொதுவான ஏழாவது அறிக்கைப்பத்திரம்.

---

இலங்கைச் சர்ச்சுமிஷியோனைச்சேர்ந்த சுதேச கிறிஸ்தவசபைகளின் வருஷாந்த தலைமைச் சங்கமாகிய ஏழாவது ஆலோசனைக்கூட்டம் 1886 ம் ௵ ஜனுவரி ௴ 15 உ வெள்ளிக்கிழமை கண்டியில் கூடினது.

சுதேச சபைகளின் நிலைமையைப்பற்றிய பின்வரும் பொதுவான அறிக்கைப்பத்திரம் தலைமைச் சங்கத்தில் வாசிக்கப்பட்டு, அவர்கள் உத்தரவால் சுதேச கிறிஸ்தவர்களுக்குள் பரவும்படி அச்சிடப்பட்டிருக்கிறது.

தலைமை ஆலோசனைச்சங்கத்துக்கு வந்த பற்பல பகுதிகளின் அறிக்கைப்பத்திரங்களால், அந்தந்த டிஸ்திரிக்ட் ஆலோசனைச்சங்கத்தோடு சம்பந்தப்பட்ட பல சபைகளில், கிறிஸ்துவின் ஊழியம் ஊக்கமாய நடந்தேறி வந்திருக்கிறதென்றும், தேவ ஆசிர்வாதத்தால் ஞான நன்மைகள் உண்டாயிருக்கிறதென்றும், தெரிய வருகிறது.

அநேகசபைகளில் ஞான உயிரும் பக்திமுயற்சியும் நிலைபெற்று வந்திருக்கிறது. சிலசபைகளில் கிருபையின் வளர்ச்சிக்குரிய குறிப்புகளை சபையார் காட்டியிருக்கிறார்கள். அஞ்ஞான மார்க்கத்திலிருந்து குணப்பட்ட சிலர், ஞானஸ்நானத்தினால் சபையில் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆசிர்வாதங்களுக்காக நாம் தேவனுக்குத் தோத்திரஞ்செலுத்தி, இனிச் செய்யவேண்டிய பணிவிடைகளில், தைரியங்கொள்வோமாக. சிங்களச் சபைகளைப் பார்க்கிலும் தமிழ்ச் சபைகளில் எழுப்புதலுண்டாக்கும் காரணங்கள் அதிகமாயுண்டு என்று சொல்லலாம்.

# அறிக்கைப்பத்திரத் திரட்டு.

## 1 சிங்களப்பகுதிகள்.

1. கண்டிப்பகுதி.—கண்டித் திருத்துவ ஆலயத்தில் ஓய்வுநாள்தோறும் இரண்டு ஆராதனைகளும், கட்டுக்கலையில் இரண்டும், கட்டம்பையில் ஒன்றும், நடந்துவருகிறதுந்தவிர, கம்பளை நாவல்பெட்டியிலும், ஆராதனைகள் நடக்கின்றன. சில கோவில்களில் வாரத்தின் மற்றநாட்களிலும் ஆராதனைகள் நடக்கின்றன. இப்பகுதிக் கிறிஸ்தவர்களின் மொத்தத்தொகை 407. இராப்போசனம்பெற்றவர்கள் 101. பாஸ்றமாரும் உபதேசிமாரும் புறமதஸ்தருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருகிறார்கள். கடந்தவருடம் குணப்பட்டு ஞானஸ்நானம்பெற்றவர்கள் 6 பேர். கடந்தவருடத்தில் சேர்ந்த சங்கப்பணம் ரூபாய், 1558 சதம் 79.

2 கோட்டாப்பகுதி.— இந்தப்பகுதியில் நாலு பாஸ்றரேற்றுகள் உண்டு. ஓய்வுநாட்களிலும் இடைக்கிடையே வாரத்தின் மற்றநாட்களிலும் 13 கோவில்களில் ஆராதனை நடக்கிறது. வீடுகளில் பிரசங்கம் பண்ணுகிறதும், வேதபாட வகுப்புகளும், வாரத்தின் மற்றநாட்களில் நடந்துவருகிறது. சபையாரின் தொகை 1112. இராப்போசனம் பெற்றவர்கள் 303. சபை வருமானம் ரூபா, 961 சதம் 95. முந்தினவருஷத்திற்கு ரூபா, 21 அதிகப்பட்டிருக்கிறது. சில கிறிஸ்தவர்கள் ஓய்வுநாள்பள்ளிக்கூடங்களும் ஆராதனைகளும்நடத்தி, அதிக நன்மையும் பாஸ்றமாருக்கு மிகுந்த உதவியும் செய்து வருகிறார்கள்.

3 பத்துக்காமம்.—இப்பகுதியில் பாஸ்றமார் ஸதானங்கள் நாலுண்டு. இவைகளில் ஓய்வுநாள் ஆராதனைகளும் வீடுகளில் பிரசங்கம்பண்ணுகிறதும் வேதபாட வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. அஞ்ஞானிகளுக்குள் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்

டிருக்கிறது. இப்பகுதியிலுள்ள கிறிஸ்தவர்கள் 526. இராப்போசனம் பெற்றவர்கள் 147. சபைவருமானம் ரூபா, 825 சதம் 60. இங்குள்ள பழையகோவில் பழுதுபார்க்கப்பட்டது சந்தோஷமான காரியம். ஆகிலும் அது சுதேசசபையின் செலவினால் பழுதுபார்க்கப்படவில்லை.

4 குருணாக்கல், கேகாலை, தலம்பேட்டி.—இந்த இடங்களிலிருந்து விசேஷித்த அறிக்கைப்பத்திரம் சங்கத்துக்கு வரவில்லை. இவ்விடங்களில் பல சங்கடங்களும் தடைகளும் நேரிட்டபோதிலும் தேவ ஊழியம் விர்த்தி அடைந்திருக்கிறது.

## II தமிழ்ப்பகுதிகள்.

தமிழ்க் கிறிஸ்தவசபைகளின் பல பகுதிகளிலிருந்தும் எழுப்புதலானசெய்தி வந்திருக்கிறது.

1 கொழும்பு.—இப்பகுதியில் சபையார் அதிகப்பட்டிருக்கிறார்கள். இது மிகுந்த தோத்திரஞ் செலுத்தத்தக்க காரியம். இப்பகுதியைச்சேர்ந்த கிறிஸ்தவர்களின் மொத்தத்தொகை 812. இராப்போசனம் பெற்றவர்கள் 220. கடந்தவருடத்தில் 16 ஆட்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். சபையாரிடத்திற் காணப்பட்ட அதிகமான உதாரகுணத்துக்காகவும் தோத்திரம் செலுத்தவேண்டும். முந்தின வருஷத்தில் சபைவருமானம் ரூபா, 921 சதம் 24. கடந்த வருஷத்திலோ ரூபா, 978 சதம் 20. இது முந்தின வருஷத்துக்கு ரூபா, 56 சதம் 96 அதிகம்.

2 கூலிமிசியோன்.— இதைப்பற்றி யாதொரு விசேஷித்த அறிக்கைப்பத்திரமும் இச்சங்கத்துக்கு வரவில்லை. ஆனால் அந்தப்பகுதிக்குரிய வருஷாந்த அறிக்கைப்பத்திரத்தினால், அதில் 1647 கிறிஸ்தவர்கள் இருக்கிறதாக பொதுவாய்த் தெரியவருகிறது. இராப்

போசனம் பெற்றவர்களின் தொகை 429. ஞானஸ்நானத்தால் 32 ஆட்கள் சபையிற் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் தங்கள் திறமைக்குத் தக்கதாய் உதாரமாக சங்கப்பணம்முதலானவை கொடுத்திருக்கிறார்கள்.

3 யாழ்ப்பாணம்.—இந்தப் பகுதியிலிருந்து ஒரு விபரமான அறிக்கைப்பத்திரம் சங்கம் முடியப்போகிற தருணத்தில் தபால்மார்க்கமாய் வந்துசேர்ந்தது. கடந்த வருஷத்தில் இப்பகுதியில் தேவனுடைய மட்டில்லாத கிருபைகள் விளங்கியிருக்கின்றன. அநேக சோதனைகளிருந்தாலும் அவைகள் இரக்கங்கள் கலந்தவைகளாயிருக்கின்றன. குருப்பட்டம்பெற்ற நாலு சுதேச குருமாருக்குள் இரண்டுபேரை ஒன்பது மாதத்துக்குள்ளாகக் கர்த்தர் அழைத்துக்கொண்டு, வேறு இரண்டுபேராகிய, கனம். ஜே. கையில்ஸ்போதகரையும், கனம். ஜே. பாக்கஸ்போதகரையும் அவர்களிடத்திற்கு, கடந்த திருத்துவத்திருநாளில் ஏற்படுத்தச் சித்தமானார்.

யாழ்ப்பாணத்துப் பகுதியிலுள்ள சுதேச கிறிஸ்தவர்களின் மொத்தத்தொகை 814. இராப்போசனம் பெற்ற ஆட்கள் 358. சபைவருமானம் ரூபா, 2018 சதம் 56. இப்பகுதியிலுள்ள சுதேச கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகளுக்குள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதிலும் முயற்சியாய் இருந்திருக்கிறார்கள். இவர்களுக்குள் சுதேச மிஷனரிசங்கமிருக்கிறது. இது பாஸ்றரேற்றுகளை சேராமலிருக்கிற அஞ்ஞானிகள் வாசஞ்செய்யும் இடங்களில் போதித்துவருகிற உபதேசிமாரைத் தாபரித்துவருகிறது.

அறிக்கைப்பத்திரத்திலுள்ள மேற்கண்டகாரியங்கள் தோத்திரஞ் செலுத்தத்தக்கதான காரணங்களே. ஆகிலும் துக்கமுண்டாக்கும் சிலசில சங்கடங்களும் நமது சபையிலுண்டு. இரண்டொரு விசேஷித்த பகுதிகளில் சபைவருமானம் மிகவும் குறைய, அவைகள் மிகவும் சங்கடத்தை அனுபவிக்கிறது. இவைகளில்

வேலைபார்த்துவருகிற சிலரை நீக்கி, இவ்வகையாய் நடந்துவந்த வேலையைக் குறைக்கவேண்டியதாயிருக்கிறது.

இப்படிச்செய்வது விர்த்தியைக்காட்டாமல் அபிவிர்த்தியைக் காட்டுகிறது. கூடுமானால், இவை நேரிடாதபடியே பார்க்கவேண்டும். நமது சபைகளில் சிலவை தங்கள் போதகரைத் தாங்களே தாபரிக்க இன்னம் அதிகமாய் படிக்கவேண்டுமென்றும், பரிசுத்த பவுல்-கொரிந்தியரைப்பார்த்து, "நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருக்க உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?" என்ற வசனம் அவர்கள் மனதில் நன்ருய்ப் பதியவேண்டுமென்றும், மேற்கண்ட காரியங்கள் தெளிவாய்க் காட்டுகிறது.

டின்திரிச்ட் ஆலோசனைச் சங்கத்தாரும் சர்ச்சு கமிட்டியாரும் இந்தச் சபைவருமானக் குறைவை ஒரு பெரிய காரியமாக எண்ணவேண்டும். சபை வருமானம் தண்டும்படியாக இப்போது கையாடிவருகிற முறையிலும் அதிக ஒழுங்கும் கிரமமுமான ஒருமுறையை தங்கள் தங்கள் பகுதிகள் ஏகத்திற்கு கையாடுவது அவசியமும் தங்கள் கடமையுமாயிருக்கிறது. சம்பளமாவது அல்லது வேறுவகையான வருமானமாவது பெறுகிற சபையின் எந்த அங்கமும் தன் வருமானத்துக்குத் தக்கதாய் மாதாமாதம் ஒழுங்காய் உதவிசெய்ய, அவர்களை ஏவவேண்டும். இப்படித் தங்கள் திறமைக்குத்தக்கதாய் தங்கள் போதகரைத் தாபரிக்க உதவி செய்யாதவர்கள் கிறிஸ்தவர்கள் செய்யவேண்டிய கடமையைச் செய்யவில்லை என்றும் அவர்கள் சபையின் அங்கமாக எண்ணப்பட அல்லது அங்கங்களுக்குரிய சலாக்கியங்களை அனுபவிக்க அவர்களுக்குப் பாத்தியமில்லையென்றும் கூடியஅளவு அவர்கள் மனதில் உணர்த்தவும் வேண்டும்.

கடைசியாக நமது சபைகளிலுள்ள சுதேச கிறிஸ்தவர்கள் யாவரும் தங்கள் சுதேச போதகரை தாபரித்து, தங்கள் மார்க்கத்தின் சட்டங்களைக் காத்து நடந்து,

தேவனுடைய உதவியாலும் ஆசீர்வாதத்தாலும் தாங்கள் சுயாதீனமான ஒரு நிலபரத்துக்கு வர, ஆசையோடு முயன்று சுதேச சபைக் காரியங்களையெல்லாம் தங்கள் பொறுப்பிலேயே போட்டுக்கொண்டு, இவ்வாறு தங்களைத் தாங்களே தாபரிக்கிறவர்களாயும், நடத்துகிறவர்களாயும் விர்த்திபண்ணுகிறவர்களாயும் இருக்கும்படிக்கு விரும்புகிறோம்.

E. T. HIGGENS,

*Chairman of Ceylon*

*C.M.S. Central Church Council.*